# திசைகளின் நடுவே

ஜெயமோகன்

நிழல் என்மீது கவிந்து சுவடியை மறைத்தது. அம்மா. ஓரக்கண்ணால் பார்த்தேன். கதவோரம் கலங்கிய விழிகள் தெரிந்தன. என் மன அடுக்கு குலைந்துவிட்டது. சுவடிக் கட்டை இறுக்கிவிட்டு அப்படியே பேசாமல் அமர்ந்திருந்தேன். கணங்கள் நீண்டன. அவள் பார்வையின் கூரிய நுனி என் புறங்கழுத்தை வருடுவதை உணர்ந்தேன். இக்கட்டான நிலை சட்டென்று ஆங்காரத்தையும், அவள் மீது கடும் கோபத்தையும் கிளப்பியது. வேகத்துடன் தலைதூக்கி அவளைப் பார்த்தவன் அவள் கண்ணீரைக் கண்டேன். என் உணர்வுகள் மீது குளிர்ந்த நீர் கொட்டப்பட்டது போல இருந்தது. இனியும் அப்படி அமர்ந்திருக்க முடியாது என்றுபட்டது. வெளியே எங்காவது ஓடி விட வேண்டும். வெளியே....



எவ்வளவு அற்புதம் அந்த வார்த்தை! நினைவு தெரிந்த நாள் முதலே நான் மனசுக்குள் வைத்து வருடி விளையாடும் வார்த்தை. வெளி! பாதைகள் இல்லாத விரிவு. பாதைகள் இல்லையென்றால் எல்லா திசையும் பாதையே. காற்றில் கைகளை வீசி, கால்களைத் தூக்கித் தாவி நடப்பேன். ஆத்மாவின் உள்ளே சிறகு படபடக்க கூண்டில் மோதித் தவிக்கும் திசை காட்டிப்புறா விடுதலை பெறும். அது எங்கு இட்டுச் செல்கிறதோ அங்கு செல்வேன். அது தொலைவானச் சரிவில், மவுனத்தில் ஆழ்ந்த நீலமலைகளாக இருப்பினும் சரி; கரை மோதிப் புரளும் கடல்வெளியாக இருப்பினும் சரி. கட்டுகளல்ல, சுதந்திரமே தீர்மானிக்க வேண்டும் என்னை. இந்தச் சிறுமர வீட்டின் சுவர்கள் என் கைகளை முட்டுகின்றன. கூரை என் தலையைத் தட்டித் தாழ்த்துகிறது. இந்த அர்ரையிருட்டு என் கண்களைப் பஞ்சடைய வைக்கிறது.

''தீஷணா...''

நான் திரும்பவில்லை. மரச்சுவரை வெறித்தேன். கறைகளும் விரிசல்களும் நிரம்பியிருந்தன. சட்டென்று தாடி, சடைமுடிகளுடன் ரிஷி முகங்களாக மாறி விடுபவை அவை. உபதேசிப்பவை. மவுனத்தில் ஆழ்ந்தவை. சிலசமயம் எள்ளி நகையாடுபவை. ''தீஷணா... மகனே!'' போகவில்லையா இவள்?

''தீஷணா, நான் சொல்வதைக் கேள் மகனே.

இவ்வளவு படிக்கிறாயே இந்த அன்னையின் மனம் மட்டும் உனக்குப் புரியாமல் போனதென்ன?''

சுவர் விரிசலில் அஜித் கேசகம்பளனின் வெண்தாடி முகம் சிரிக்கின்றது. என் உள்ளுறைந்த ஆக்ரோஷத்தை கிளப்பும் கிண்டல்.

''தீஷணா, தயவு செய் மகனே, என் அடிவயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டாதே.''

சட்டென்று என் கோபம் பற்றிக் கொண்டது. ''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று சீறினேன். ''உன் இடுப்பில் ஏறி அமர்ந்து கொஞ்ச வேண்டுமா?''

''தீஷணா'' என்று கையை நீட்டியபடி முன்னகர்ந்தாள். ''அந்தச் சுவடிகளை நீ படிக்க வேண்டாம் மகனே. இதேபோல இதே மனையில்தான் உன் தந்தை அமர்ந்திருப்பார். உன்னை மாதிரியே படிகமணி போல கண்கள் அவருக்கும். உன்னை மாதிரியே தான் அவரும் இரவுபகலாய் படித்தார்...''

''அழுது அழுது என்னையும் வீட்டை விட்டுத் துரத்தி விடுவாய் நீ'' என்றேன் குரூரமாய்.

''தீஷணா!'' என்று அலறிவிட்டாள். ''உன்னையும் இழந்துவிடக் கூடாது என்று தான் மகனே நான் தவிக்கிறேன். நீ கைக்குழந்தையாக இருக்கும்போது நான் அனாதையானேன். உன்னை வளர்க்க நான் பட்ட கஷ்டங்களை நீ அறிய மாட்டாய். நீதான் என் உயிர், என் லட்சியம், என் புருஷார்த்தம்.''

என் மனம் இளகி விட்டது. அவளுடைய கோணத்தில் ஏன் பார்க்க மறுக்கிறேன்? அவள் மனசின் வெம்மை ஏன் தெரியவில்லை? தெரியாமல் இல்லை. மிக நன்றாகவேத் தெரிகிறது. இந்த வலையின் ஒரு கண்ணியைக் கூட என்னால் உடைக்க முடியவில்லை. எவ்வளவு தியானம், எவ்வளவு மனனம். உடைக்கமுடியாமலேயே போய்விடலாம். என் கோபத்தின் காரணமே அதுதான் போலும்.

அவளையே உற்றுப் பார்த்தேன். பதைப்பே உருவான முகம். அடிபட்டு உடைபட்டு குறுகி வற்றிய உடம்பு. என் மனம் அடங்கிக் கொண்டிருந்தது. மெதுவாக உள்ளே சென்று விசிப் பலகையில் மல்லாந்தேன். எப்படி விளக்குவேன் இவளுக்கு, என் அவஸ்தைகளை. சுவர் சுவராகத் தோன்றி மறையும் ரிஷிமுகங்களின் அழைப்பை. விரிந்த வானில் கண்ணிமைக்கும் அனந்த கோடி விண்மீன்கள் எழுப்பும் ஆழ்ந்த அமைதியின் மையை. யாருக்குப் புரியும்? ஐயோ, எனக்கே புரியவில்லையே. கடையாணி கிரீச்சிட கிரீச்சிட ஆடும் இந்த ஊஞ்சல். என் நரம்புகள் இறுகித் தெறிக்கின்றன. என் கண்களில் ஊஞ்சலின் நிழலசைவு. என் பேச்சுகளின் ஊடே அதன் உரசலின் நாராசம். நான் படித்திருக்கக் கூடாது. என் தந்தையின் சுவடி அறையை துழாவிய கணம் என் மீது சாபம் விழுந்து விட்டது. லோகாயத ஞானம் என்ற முள் எனக்குள் குடியேறி விட்டது. குடைகிறது. குத்துகிறது. வலிக்க வலிக்க துழாவுகிறது. வேண்டாம். அது மட்டும் இல்லாமலிருந்தால் நான் பூணூல் தரித்து, வேதத்தியானமும் மீமாம்ச தருக்கமுமாய் வாழ்ந்திருப்பேன். கற்பாறையின் குளுமையுடன். மிருகத்தின் எளிமையுடன். இப்போது இரவில் லோகாயதக் கல்வி. பகலில் வேத கோஷம். என் வேஷத்தை நான் காணச் செய்யும் இந்த நெற்றிமையக் கண்ணை குத்தி உடைத்து விட்டால் என்ன? இருட்டு எனும் சுகம். நிம்மதி.

அம்மா பார்க்கிறாள். அவள் கண்களின் கவலை தெரிகிறது எனக்கு. மற்றவர்களைப் போலவே நான் சித்த சுவாதீனமிழந்து வருகிறேன் என இவளும் நம்புகிறாளா என்ன? நம்பட்டும். நான் ஏதும் செய்வதற்கில்லை. நான் அன்னியன். இந்திரப் பிரஸ்த நகரம் இன்று சதா புகையெழும் பெரியதோர் அடுப்பு. புரோகிதர்கள் தர்ப்பையுடன் அலைகிறார்கள். கரையேற்றப்படாத பித்ருக்கள் குருக்ஷேத்ரத்தில் இன்னும் எத்தனை ஆயிரம்! வேதகோஷம் சதா ஒலிக்கிறது. சோமபானம் அருந்திய துவிஜர்கள் தெருவெங்கும் தள்ளாடுகிறார்கள். ஓம் பூர்ணமதம் பூர்ணமிதம் பூர்

ணாத் பூர்ணமுதச்யதே. அதுவும் பூரணம் இதுவும் பூரணம். கவலையே வேண்டாம். குடியுங்கள், பூர்ணம் குறைவுபடுவதில்லை. உண்ணுங்கள், பூர்ணம் மாறுபடுவதில்லை. தானம் பிடுங்குங்கள், பூர்ணத்தில் இருந்து பூர்ணம் பிறக்கிறது. அவிஸை அர்ப்பியுங்கள். வயிற்றிலெரியும் அக்னிக்கு முதலில். சதுஷ்ர குண்டத்தில் மிளிரும் தேஜஸுக்கு பிறகு. ஆத்மனுக்கு முதலில், தேவர்களுக்கு பிற்பாடு. என்னால் இயலவில்லை. நான் தனித்து விடப்பட்டிருக்கிறேன். தட்சிணை வாங்குவதன் கலைகள் எனக்கு கைவரவில்லை. பூர்வ மீமாம்சமும் உபநிஷததரிசனங்களும் என் தழலை அணைக்கவில்லை. அவை என்னுள் நெய்யாகின்றன. பிருஹஸ்பதியை கொட்டுகிறேன். கபிலனை சொரிகிறேன். கணாதனை, பரமேஷ்டியை, தீஷணனை சமர்ப்பிக்கிறேன். உண்டு மேலெழுகிறது பஞ்சமுக அக்னி. மூச்சை ஊதியபடி படுக்கையில் புரண்டு புரண்டு படுக்கிறேன். ''இந்திரன் யார்? அவனைக் கண்டது யார்? ஒருவன் இன்னொருவனிடம் சொல்கிறான், இந்திரன் இல்லை. அப்படியானால் எந்த தேவனுக்கு நாம் அவிஸிடுகிறோம்'' - அந்த முகம் தெரியாத ரிக்வேத கால ரிஷி எந்த இரவில் புரண்டு புரண்டு தவித்தார்? இரவின் ஆழ்ந்த அமைதியில் காதுகளுக்கும் அப்பால் ஒலிக்கிறது ஒரு குரல். மிக அந்தரங்கமானது. அது என் நரம்புகள் வழியாக சங்கீதம் போல வழிந்தோடுகிறது. ஏதுமில்லை. ஏதும் இல்லை. எதுவுமே இல்லை. உனக்கு நீ மட்டுமே நிஜம். முதலும் நீ. முடிவும் நீ. சகலமும் நீ மட்டுமே. உனக்கு அப்பால் ஏதுமில்லை. ஏதுமில்லை. மறுகணம் அடங்காத குழந்தை போல காலுதைத்து வீரிடுகிறது பிரக்ஞை.

யார் நான்? இந்த இருட்டில் இப்படி மல்லாந்து இப்படி இதைப்பற்றி யோசிக்கும்படி என்னைப் பணித்தது யார்? விலகு. நீ உன் குளிர்ந்த கரங்களினால் என்னைத் தழுவுகிறாய். இமைகள் மீது முத்தமிட்டு தூங்கச் செய்கிறாய். மாட்டேன். அடங்க மாட்டேன். பசப்பெல்லாம் வேண்டாம். சொல்லு. என்ன இதெல்லாம்? நான் புலன்களின் தொகுதி என்கிறாய். புலன்களின் திருஷ்ணைகளை திருப்திப்படுத்த விதிக்கப்பட்டவன் என்கிறாய். மண்ணிலிருந்து முளைத்த மரம் போல ஜடத்திலிருந்து எழுந்த ஜடம் என்கிறாய் எனில் ஜடத்திலெப்படி இந்த தவிப்பு குடியேறியது? காற்றில் கிளையசைத்து குதூகலிக்கிறது என் முற்றத்து மாமரம். அதை அணுகி தீராத வியப்புடன் பார்க்கிறேன். எத்தனை ஆனந்தம்! புலன்களும் இருப்பும் ஒன்றேயான பரவசமா அது? நிழல் போல, இருளின் அபார விரிவில் கரைந்தும் கரையாமலும் நிற்கிறது அது. ஒளிக்காக அது ஏங்கவில்லையா? இருப்பிற்கு அப்பால் என்று தாவியெழும் ஒரு பிரக்ஞை இந்த ஜடத்திற்குள் உண்டா? ஆயிரமாயிரம் இலைகளினால் வான் விரிவை தினம் தரிசித்து நிற்பது. மேகம் ஜ்வலித்து சரியும் தொடுவானம் எனக்குள் எழுப்பும் பித்து அதற்குள் எழவில்லையா என்ன?

தலை தெறித்தது. நரம்புகள் படீர் படீரென்று முறுகி வலி எழுகிறது. எத்தனை தூக்கமற்ற இரவுகள். இந்த விசிப்பலகை என் தந்தை படுத்தது. அவர் தூக்கமின்றி தவித்துத்தவித்து உழன்றது இதன் மீதுதான். ஒரு நாள் காலை இது காலியாக இருந்தது. நான் வளர்ந்தேன். தொட்டிலை மீறி, அன்னையின் அணைப்புக்கு வெளியே, என் கைகால்கள் நீண்டன. எனக்கு இந்தப் பலகை கிடைத்தது. தூக்கமற்ற இரவுகளும், என் தந்தையின் உறங்காத கண்களும். முகம் பார்க்கும் கல்லில் என் கண்களைப் பார்க்கிறேன். பயந்த விழிகள். சஞ்சலமான விழிகள். இந்த விழிகள் எனக்குரியவை அல்ல. என் தந்தைக்குரியவை. என் வழியாக கடந்து செல்பவை! எங்கு? நீண்ட குழாயின் மறு நுனியில், ஆழத்து இருளில், ஜலம் அசைவது போல இவற்றின் உள்ளே ஒரு தவிப்பு சதா அலையடிக்கிறது. முகங்கள் வழியாக பயணம் செய்யும் தவிப்பு. அதற்கு என்ன அர்த்தம்? எங்கு செல்கிறது அது? காலி விசுப்பலகையை திரும்பிப் பார்த்த ஒரு கணம் என் மனம் ஜிவ்வென்று எழுந்தது. ஒரு நொடியில் எல்லையற்ற சுதந்திரத்தில் திளைத்தேன். மறுகணம் என்ன இது என்று திகைத்தேன். மனம் படபடத்தது.

தூங்கிவிட்டால் போதும். பதிலற்ற கேள்விகள் அப்படியே தமஸில் ஆழ்ந்து போகும். நான் இல்லாத சூனியம். காலையில் சூரியனுடன் சேர்ந்து இனிமையின் கடலில் இருந்து மிதந்தெழுவேன். முழு வலிமையுடன் என் இம்சை என் மீது மோதும். போதும். தொலைத்துவிட்டால் போதும். இந்தக் கண்களை, இந்த முகத்தை, பெயரை, வீட்டை, உறவை. அய்யோ அதறக்ப் பாலும் இருப்பேனே! பெய்ரற்ற முகமற்ற நான்! எரிய வேண்டும்! கரைய வேண்டும்! ஜடத்தில் மறையவேண்டும்! என் இம்சை காற்றில் உடம்பு தேடித் தவிக்க வேண்டும். இம்சையற்றிருப்பேனா அப்போது? எங்கிருப்பேன்? இருப்பேனா? இருப்பேன் எனில் ஜடத்தை மீறி எழும் இந்த உத்வேகம் பிரபஞ்ச விரிவில் என் ஜடத்திற்குள் மட்டும் எப்படி வந்தது?

கணாத மகரிஷியின் கரம் என் தலைமயிரை வருடுகிறது. ''அடே பேதை. மனம் இழுக்கும் இழுப்பை உதறு. மனமே மாயை. காண்பதெல்லாம் சத்தியம். கேட்பதெல்லாம் சத்தியம். உணர்வதெல்லாம் சத்தியம். மனம் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் சத்தியம். மனதை உதறு. நிஜத்தில் இரு.''

என் கண்களுள் இருட்டு நிறைந்து விரிகிறது. நட்சத்திரங்கள் தெரிகின்றன. அண்ணாந்து பார்க்கிறேன். எல்லையற்ற வானமே உன்னிலிருந்து தனித்து நிற்கிறேன். இந்தப் பிரக்ஞையை எப்படி அடைந்தேன். பழத்துள் வண்டென என்னை கொல்கிறதே இது! இந்த இந்திரப்பிரஸ்த நகரத்து சிறு வீட்டின் திண்ணையில் அமர்ந்தபடி உன்னைப் பார்க்கும் எனது தனித்த இருப்பு உனக்கு எவ்வகையில் ஒரு பொருட்டு? பார்க்கப் பார்க்க விரிகிறது என் மனம்? எல்லையற்றுப் பரவுகிறது. கையைத் தூக்கிப் பார்க்கிறேன். இது யாருடைய கரம்? இது யாருடைய கால்? வெது வெதுப்பான மாமிசத்தினால் பொதியப்பட்ட இந்த கூடு எது? இது என் கட்டுப்பாட்டில் எப்படி வந்தது? இதன் பிடியில் நான் இருக்கிறேனா? சிறைப்பட்டிருக்கிறேனா? இடத்துடன் நேரத்துடன் வடிவத்துடன் என்னைப் பிணைக்கிறது இது. அதோ நட்சத்திரம் ஊடுருவும் ஒளிர்மேக விளிம்பை அடைய முடியுமா நான்? இளமேகங்களின் சிதறல்கள் மீது நீந்த முடியுமா? எவ்வளவு பாரம்? எவ்வளவு அழுக்கும் கசடும் நிறைந்த பாரம்! துவாரங்களில் முழுக்க தினவுடன் சதா நச்சரிக்கும் பாரம்! இதை உதறி எழ வேண்டும்! மேலே. அகண்டத்தில் ஒரு நுனியில் கரைந்து, மறுநுனி நோக்கி ஏங்குபவனாக அல்ல. அத்தனை விரிவையும் ஆக்ரமிப்பவனாக. வாயு நிரம்பிய குடுக்கை போல பூமியில் தொட்டும், காற்று வெளியில் எம்பியும் தவிக்கிறேன். ஏதோ காற்று ஒன்று என்னைத் தூக்கி வீசுகிறது. வானில் பறக்கிறேன். எடையின்றி ஆகிறேன். குடுக்கைக்குள் என் காற்று விம்முகிறது. எடை இல்லைதான். ஆயினும் இந்தக் குடுக்கையே என்னையும் வெளியையும் பிரிப்பது. உடைத்து விசிறுகிறேன். விழுகிறது. ஒலி என்னை அடையவில்லை. ஏன்? ஐயோ நான் இல்லை. அகண்ட வாயுப் பிரவாகம். பெருவெளி மட்டுமே. நான் இல்லை.

உதறியபடி உடம்பு எகிறும். விழிப்பேன். வானத்தின் கரிய தகடு ஒரு கணத்தில் உக்கிரமானதோர் பயங்கரமாக மாறிவிடும். இருட்டு அதிலிருந்து வழிந்து பூமியெங்கும் நிறையும். கரங்களை விரித்தபடி என்னை அது கவ்வ வரும். எழுந்தோடி அறைக்குள் நுழைவேன். ஜன்னல்களை அறைந்துமூடி விளக்கேற்றுவேன். நிம்மதியில் மனக்குவட்டில் அழுத்தம் குறையும். வியர்வை குளிரும். பெருமூச்சுடன் என்னை பொதிந்திருக்கும் சுவர்களைப் பார்ப்பேன். நான் இருக்கிறேன். கைகளைத் தூக்கி முகத்தருகே கொண்டு வந்து பார்ப்பேன். என்னுடைய கை. என்னுடைய கால்கள். என் உடம்பு. நான் இருக்கிறேன். இந்தச் சுவர்கள் போல. விளக்கு போல. பிரபஞ்சம் எத்தனை ஸ்தூலமோ அத்தனை ஸ்தூலம் நானும். நெஞ்சு நிறைந்து விம்மும். கண்கள் நிறைந்து வழியும்.

சுவரில் அஜித கேச கம்பளனின் புன்னகை. மாயை என்பது யாது மகனே? நீ பார்த்து

மலைத்த பிரபஞ்சமா, உன் மனமா?

என் மனம் தான். என் மனமே மாயை. இனி எனக்கு இந்த அவஸ்தை இல்லை. இனி பொய் யான மன எழுச்சிகள் இல்லை. இந்த உடல் எனது. இந்த உடலே நான். இதன் முன் சரணடை கிறேன். இதன் சகல அக்னிகளுக்கும் அவிஸிடு வேன். இது இருக்கும் வரை நான் உண்டு. இது இல்லாதபோது நான் இல்லை. இதுவே என் வடி வம். இதுவே என் சூக்குமம். இது இல்லாமலா தலே என் முடிவு. ஆனால் அது இப்போது இல்லை. இந்தக் கணம் நான் இருக்கிறேன். இருக் கிறேன். இருக்கிறேன் என்று மனசுக்குள் ஜபிப் பேன். இருக்கிறேன் என மனத்தாளமும் மந்தி ரிக்க ஆரம்பிக்கும்போது என் இம்சை மறையும், பேரமைதி. தூக்கத்தின் ஆழம். ஆனால் கண்வி ழித்த மறுகணமே உணர்வுகளைக் கூசச் செய்யும ளவு என் இருமையுணர்வு என்னை தழுவும். மல மூத்திரம் தேங்கிய என் உடலை நான் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்வேன். ஊஞ்சலின் கிரீச் கிரீச் தொடங்கிவிடும்.

''தீஷணா'' என்றது அம்மாவின் குரல். ''ஏன் மகனே படுத்திருக்கிறாய்? உன் உடம்புக்கு என்ன? ஏனிப்படி பிரமை பிடித்தது போலிருக்கி றாய்?''

''அம்மா என்னை சற்றுநேரம் விட்டு விடேன். தயவு செய்து...''

''தீஷணா'' என்றாள். மீண்டும் கண்ணீர்.

நான் மீண்டும் தணிந்தேன். ''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''தீஷணா உனக்குத் தெரியுமா இன்று இந்த நகரம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறதென்று! இன்று மகாதான விழா. ஊரே விழாக்கோலத்தில் இருக்கிறது. எங்கும் சந்தோஷம், திருப்தி. மகனே, நீ மட்டும் இப்படி இருப்பதை நான் எப் படி தாங்குவேன், சொல்லு...''

விடமாட்டாள். என்னிலிருந்து கணநேரம் கூட தன் கவனத்தை விலக்க இவளால் இயலாது. நான் எழுந்து உத்தரீயத்தை எடுத்துப் போர்ட்டுக் கொண்டேன்.

''தீஷணா எங்கே போகிறாய்? நான் சொன்ன தில் உனக்குக் கோபமா?''

''பயப்படாதே. நான் வீட்டைவிட்டு ஓட வில்லை. உன் சக்கரவர்த்தியின் மணிமுடி சூடிய கோலத்தையும் அவனுடைய மகாதான விழாச் சிறப்பையும் தரிசித்து விட்டு வருகிறேன்.'' கிண் டல் கசிந்து விட்டது போலும். பதைப்புடன் அம்மா வாசல்வரை தொடர்கிறாள்.

இந்திரப் பிரஸ்தம் மின்னிக் கொண்டிருந்தது. காலை வெயிலில் வெண்சுதைக் கோபுரங்கள்



மேகங்கள் போல கண்கூச ஒளிர்ந்தன. கொடிக ளின் நிழல்கள் தரைமீது அசைந்தன. செம்புக் கத வுகளில் மங்கலச் சின்னங்கள். புத்தாடையணிந்த குழந்தைகளின் உற்சாகம். பட்டாடை சரசரக்க பெண்கள் திரிந்தனர். மயிற்கழுத்துகளின் நளினச் சொடுக்கல்கள். கடைக்கண் மின்னல்கள். முறுவ லில் நெளியும் உதடுகள். தெருவில் வாடிய முல் லைகளும் சிந்திய குங்குமமும், நறுமணச் சுண்ண மும் மணக்கிறது. சகல உல்லாசங்களும் ஆழத் தில் காமத்தை கொண்டிருப்பது எவ்வளவு விந்தை!

வெகுதூரத்தில் அலையோசை போலக் கேட் பது கடலல்ல. குருக்ஷேத்ர ரணபூமியின் ஓலம்.

ஒரு ஆறாத ரணம் போல சீழ்பிடித்து நாறுகிறது அது. ஈக்கள் போல நாய் நரிகள், கழுகுகள். இரவின் ஆழ்ந்த மவுனத்தில் பிரளய ஒலி போல நெருங்கி வரும் அதன் ஓசை. நெஞ்சை சுட்டுத் துளைத்து உட்புகும் எரியம்பு போல! வார்த்தைகளாக மாற முடியாத மாபெரும் சோகம் மனசின் மீது பொழியும். முகம் நனைய உடல் நடுங்க, கண்ணீர் வழியும். ரத்தமும் நிணமும் வழிந்த அதைகண்ட என் கண்களில் இன்னமும் மாசு தங்கியிருப்பது போல் கசக்கி விட்டுக் கொள்வேன். சிலசமயம் புதுமழையில் செம்மலர்கள் விரிந்து பரந்த சதுப்பு வெளிபோல அதன் காட்சி என் கண்களை நிறைக்கும். இமைகளை மூடினாலும் திறந்தாலும் மாறாத சிவப்பு. பிரமையல்ல, நிஜம் என ஆத்மா திடுக்கிடும் காட்சி...

மறந்து விட்டது இந்திரப்பிரஸ்தம். அனைத்தையும். துயரமணிந்த திலகமழிந்த பெண்களை அது நிலவறையில் போட்டு பூட்டி விட்டது. ஆயுதங்களை கழுவி குங்குமமும் தைலமும் பூசி பாசறைகளில் அடுக்கி விட்டது. ரத்தம் தோய்ந்த உடைகளை எரித்து விட்டது. பித்ருக்களும், களப் பலிகளும் கங்கை வழியாக கடலுக்கு அனுப்பப் பட்டுவிட்டனர். அங்கஹீனர்களும் நோயாளிகளும் பின்கட்டுகளுக்குச் சென்று விட்டனர். முகப்புகளில் மாக்கோலங்களும், பூமாலைகளும் நிரம்பி விட்டன. தம்பூராக்களும் யாழ்களும் முகப்பறைகளுக்கு வந்து விட்டன. எனினும் சில சமயம் சதங்கையொலி அம்புறாத்தூணியின் அசைவை நினைவுறுத்தலாம். மிருதங்கம் அசப்பில் நாணொலியாக கேட்கலாம். இல்லை. ஏதுமில்லை. இந்திரபிரஸ்தம் எதையும் கேட்கவில்லை. புலன்கள் கூர்மங்கி காமம் கண்விழித்த குதூகலம்.

பெரும் வியப்புடன் ஒவ்வொரு முகமாய் பார்த்தபடி நடக்கிறேன். எவ்வளவு சந்தோஷம்! எவ்வளவு பரபரப்பு! எந்த முகத்திலும் இழப்பின் சுவடுகள் இல்லை. எப்படி சாத்தியமாயிற்று இது? புற உலகில் கால் வைத்த மறுகணமே பெரும் வியப்பு என்னைப் பற்றிக் கொள்கிறது. எப்படி? எப்படி இதெல்லாம் சாத்தியம் என்று ஒவ்வொன்றும் என்னைத் திடுக்கிட வைக்கின்றன. எனக்குப் புரியவில்லை. எதுவுமே புரியவில்லை. விழிக்கிறேன். திகைத்து தெருக்களில் நின்றுவிடுகிறேன். எனக்கு சித்தப் பிரமை என்கிறார்கள். அஹ்ஹா, சித்தப்பிரமையாம் எனக்கு! ஒருவேளை - திடுக் என்றது இதயம். ஒரு வேளை அதில் உண்மை இருக்குமோ? இப்படிப்பட்ட எண்ணங்கள்தான் பைத்தியத்தின் முதல் மீட்டல்களோ? இல்லை. சே, என்ன முட்டாள்தனம். நான் எவ்வளவு தெளிவாக இருக்கிறேன். எவ்வளவு யோசிக்கிறேன். தெளிவாக யோசிப்பதுதான் பைத்தியமோ என்னவோ... உளறாதே.. ஆனால் ஏன் என் மண்டை இப்படி தெறிக்க வேண்டும்? விடு. வேறெதையாவது யோசி. பார். எவ்வளவு அழகான தெரு. எவ்வளவு ஜனங்கள். யோசிக்காதே. வேடிக்கை பார். குழந்தைபோல இயல்பான எதிர்வினைகளுடன் பார்...

ஆறு சூதர்கள் வாத்தியங்களுடன் எதிரே வந்தனர். ஒருவன் தன் கையில் ஒரு வெள்ளிக்கோல் வைத்திருந்தான். தலைமைப் பாடகன். எல்லாரும் மஞ்சள் தலைப்பாகை அணிந்து உத்தரியங்களும் வேட்டிகளும் அணிந்திருந்தனர். இது இவர்களின் காலம். பெரியதோர் மாளிகை முற்றத்தில் அவர்கள் நின்றனர். உடனே உற்சாகமான கும்பல் சூழ்ந்து கொண்டது. ஜன்னல்கள் தோறும் பெண் முகங்கள் மலர்ந்தன. குழந்தைகளை பெரியவர்கள் அடக்கினர். மவுனம். உத்வேகம்.

பாடுவோம் குருவம்ச மகிமைகளைப் பாடுவோம்.
குலகுரு கிருஷ்ண துவைபாயனனைப் பாடுவோம்
பாண்டுவின் புத்திரர்களைப் பாடுவோம்
மணிமகுடம் சூடிய தருமனின் புகழ் பாடுவோம்

வெற்றி தேடித் தந்தவன் விஜயன்
என்றும் குறையாதது பீமன் புயவலிமை
யாதவக் கிருஷ்ணனோ மாபெரும் ராஜ தந்திரி
வெற்றியும் புகழும் என்றும்
இவர்களுக்கே.

பாரத வர்ஷம் குளிர்ந்தது இன்று
வானம் அருளாய் சுரக்கிறது எங்கும்

இனிதருமம் செழிக்கும், இனி கிருதயுகம் மேம்படும்
இதோ வந்துவிட்டது வேளை
பரிதியெழும் காலை.

தாளமும் சுருதியும் இயைய விரிந்தது குரு வம்சத்தின் கதை. அஸ்தின புரியின் ஆதிக்கத்திற்காக நிகழ்ந்த சகோதரச் சண்டை. குருக்ஷேத்திரத்தில் நடந்த சாகஸங்கள். மரணமூர்த்தி நடமாடிய நாட்கள். வெறிகள், சபதங்கள், வெற்றிகள், இழப்புகள். பிரமை பிடித்த கூட்டம் உறைந்து நிற்கிறது. நிஜம் அதற்குமுன் கனவாக ஆகி விட்டிருக்கிறது. நாளை கிருஷ்ண துவை பாயனனின் மகா கவித்துவத்தில் இது விண்ணெட்ட உயரும். தலைமுறை ஞாபகங்களில் தொடரும். தழைக்கும். காலத்தின் வேரில் இருந்து கிளைநுனிகள் தோறும் கொடி வீசிப் படரும்.

எத்தனை உற்சாகம் இந்த சூத்திரர்களுக்கு! சூதர்களின் பாடலை மெய்மறந்து கேட்கிறார்கள். தஸ்யுக்களே அந்த சூதர்களிடம் அவர்களுடைய பாடலில் கடோத்கஜன் என்ற பெயர் ஏன் உச்சரிக்கப்படவில்லை என்று கேளுங்கள். ராதேயன் கர்ணனை ஏன் அவர்கள் பாடவில்லை என விசாரியுங்கள். ஆனால் அவர்களைப் பற்றி குறைந்த பட்சம் காடுகளில் தஸ்யுக்கள் பாடுகிறார்கள். சூத்திர ஞாபகங்களில் அவர்கள் பெயர் தொடர்கிறது. ஆனால் ஆயுதமேந்தும் உரிமைகூட இல்லாமல் ரணகளம் புகுந்து ஆரிய அம்புகளினால் துண்டாடப்பட்ட முரசேந்திகளை, யானைப்பாகர்களை, தேரோட்டிகளை, சூத்திர லட்சங்களை எந்தப் பாடல் பாடும்? தலைமுறை ஞாபகக் கடலில் எந்த துளியில் அவர்கள் எஞ்சுவார்கள்? நாளை கிருஷ்ண துவைபாயனன். பாண்டுவின் புத்திரர்களின் வீரகதையை எழுதப்போகும் மகாவியாசன். எத்தனை பெயர்களை அவன் நா பட்டியல் போடும்? வீண் வெறிகளும், சபதங்களும், லட்சியங்களும், தர்மங்களும் எல்லாம் பூமியின் உதரத்தில் செரித்து இல்லாமலாகின்றன. மகத்தான அக்னியை உள்ளே உறையச் செய்தவளாய், குளிர்ந்து மல்லாந்திருக்கிறது பூமி. பசுமையுடன் பொலிகிறது. உணவூட்டுகிறது. வெறியூட்டுகிறது. சதுர்வித புருஷார்த்த மென பிரமை காட்டுகிறது. தன் அக்னியில் அவிஸாக எல்லாவற்றையும் உள்ளிழுத்துக் கொள்கிறது. மூடர்கள். மூடர்களின் கோலாகலம். மூடர்களின் நகரம்...

வேசர நாட்டு சந்தனமும், கலிங்க தேசத்து பட்டும், பாண்டி நாட்டு முத்தும், வங்க தேசத்து சங்கும் குவிந்த மாபெரும் கடைவீதி. பொற்காசுகள் சிரிக்கின்றன. பொற்காசுகளுக்காக தங்களையே விற்றும் வாங்கியும் மனிதர்கள் சிரிக்கிறார்கள். பேதை முகங்கள் பழுத்துக் குலுங்க திசையெங்கும் அசையும் மனிதமரக்காடு.

சட்டென்று என்னைச் சுற்றி ஒருவிதமான பரபரப்பு ஏற்படுவதை அறிந்தேன். அடங்கிய குரல்கள் வழியாக ஒரு செய்தி விரைந்து பரவுகிறது. என்னருகே நின்ற ஒருவன் மிக மெதுவாக, பீதி



படிந்த குரலில் என்னிடம் சொன்னான். ''சார்வாகன்.''

''எங்கே?'' என்றேன் பரபரப்புடன். முதல் முறையாக ஒரு சார்வாகனை பார்க்கப் போகிறேன். எங்கே என்று எம்பி எம்பிப் பார்த்தேன். தூரத்தில் தூக்கிக் கட்டிய சடை கொண்டை உயரமாக அசைவது தெரிந்தது. நான் கும்பலை நெருங்கியபடி அணுகினேன்.

பெருச்சாளித் தோலால் ஆன கோவணம் மட்டும் அணிந்த, நெடிய கரிய உடல். பூச்சிக்கடியிலிருந்து தப்ப உடம்பெங்கும் சாம்பல் பூசியிருந்தான். தாடியும் மீசையும் அடர்ந்த நீண்ட முகத்தில்

எடுப்பான நாசி. ஜ்வலிக்கும் சிவந்த கண்கள். ஒரு கையில் கொய்யா மரக்கிளையாலான யோக தண்டு. மறுகையில் மண்டையோட்டுத் திரு வோடு. இவன்தானா? பிரமிப்பும் உத்வேகமும் எனக்குள் நிறைந்தன. அவன் காலடிகளை நோக்கி என் கண்கள் சரிந்தன. காய்ப்பேறிய முரட்டுப் பாதங்கள். முள்ளிலும், பூவிலும், நீரிலும், நெருப்பிலும் அலைந்தவை. அவை இலக்கைத் தொட்டு விட்டனவா? அவற்றின் கருமை. விரல் நுனிகளில் சுருண்டு இறுகிய தவிட்டு நிற நகங்கள். கிளைவிட்டு பரவிய நரம்புகள். செம்மண்தூசு. சாம்பல் தூசு. வடுக்கள். வெடிப்புகள். புண்கள். ஒரு ஜென்மத்தின் சகல இம்சைகளையும் தன்னில் ஏற்ற பாதங்கள். அவற்றில் விழுவேன். அவை ஏற்ற வடுக்களை எல்லாம் நான் என் உடலெங்கும் ஏற்கத் தயார்? அவை நடந்த பாதைகளில் நான் என் உடலால் புரண்டு செல்வேன். உத்வேகத்துடன், தவிப்புடன் நான் அந்தக் கண்களைப் பார்த்தேன். எல்லா முகங்களிலும் நான் காணும் அந்தத் திரை இல்லை. பனித்துளியில் வனநெருப்பு பிரதிபலிப்பது போலிருந்தது. அவற்றில் தத்தளிப்பு இல்லை. அவன் தலை குனிந்திருக்கவில்லை. தருக்குடன் நிமிர்ந்திருந்தது. அவனில் இருந்து ஜ்வாலை வீசுவது போலிருந்தது. நெருங்க முடியாது என்று தோன்றியது. நான் என்னையறியாமலேயே ஒடுங்கிவிட்டேன். என் கைகள் மார்பில் படிந்து விட்டன. என் புலன்கள் கூர்மையடைந்து குவிந்து விட்டன. என் ஊஞ்சல் நின்றுவிட்டது.

சார்வாகன் கூட்டத்தைப் பார்த்தான். பிறகு உரத்த குரலில் ''பிரகஸ்பதியின் சீடரான சார்வாக மகரிஷியின் வழிவந்த சார்வாகன் நான். உண்மை ஞானம் பற்றி என்னிடம் விவாதிக்கத் தயாராக இங்கு யாரேனும் உள்ளனரா?'' என்றான்.

எங்கும் மவுனம் ஏற்பட்டது. சார்வாகன் தன் தண்டத்தை நிலத்தில் குத்தி நிறுத்தினான். அதனருகே தலை நிமிர்ந்து நின்றான்.

மவுனம் என் காதுகளை குத்தியது-சார்வாகன் உணர்ச்சியற்ற முகத்துடன் நின்றான். பிறகு உரக்க ''யாருமில்லையா?'' என்றான். பதில் இருக்கவில்லை. அவன் தன் தண்டத்தைத் தூக்கி வானம் நோக்கி மூன்றுமுறை ஆட்டினான். ''சார்வாக மெய்ஞானம் வெல்க'' என்று கூவினான். கூட்டமெங்கும் பரபரப்பு ஒரு அலைபோல பரவி ஓடுவதை கண்டேன்.

சார்வாகன் தன் கம்பீரமான குரலில் பேச ஆரம்பித்தான். ''ஓ மூட ஜனங்களே! தஸ்யுக்களே! சூத்திரர்களே! யாருடைய விழாவை கொண்டாடுகிறீர்கள் நீங்கள்? வென்றடக்கிய ஆரியனின் விழாவையா? யாருடைய யாககுண்டத்து நெருப்பில் உழைப்பை நெய்யாக ஊற்றுகிறீர்கள்? மோட்சத்திற்காகவா! எங்குள்ளது அந்த மோட்சம்? யார் பார்த்தது அதை? இந்திரனை நோக்கி அவிஸை கொட்டும் பிராமணர்களே, எங்கே உங்கள் இந்திரன்? அவன் ஜடமா? ஜடமல்ல என்றால் அவன் வடிவம் என்ன? வடிவமில்லாவிடில் அவனை எப்படிக் கண்டீர்கள்? இந்திரன் இல்லை. பிரம்மா இல்லை. விஷ்ணு இல்லை. முப்பத்து முக்கோடி தேவர்களும் முழுக் கற்பனை. பிரபஞ்சம் ஜடத்தாலானது. பிரித்வி, ஜலம், வாயு, அக்னி என்ற மூலத்தாதுக்களின் கூட்டு அது என நான் சொல்கிறேன். யார் எதிர்க்க முன் வருகிறீர்கள்?''

மவுனம். மூச்சொலிகள்.

''யாருமில்லையா? நான் சொல்கிறேன். நானும் ஜடம். நீங்களும் ஜடம். பூமி ஜடம். வாயு ஜடம். நீர் ஜடம். ஜடம் ஜடத்தை உண்ணுகிறது. ஜடத்திலிருந்து ஜடம் பிறக்கிறது. ஜடம் ஜடத்தை எரிக்கிறது. டேய் பிராமணா, மூடா. எப்படி உருவானவன் உன் இந்திரன்? ஜடத்தால் என்றால் அவனை விடமேலானது அவனை உண்டு பண்ணிய ஜடப் பிரபஞ்சம். ஜடத்தாலல்ல என்றால் ஜடப் பொருளான அவிஸ் எதற்கு அவனுக்கு?''

சார்வாகன் அறை கூவினான்.

''தஸ்யுக்களே! மூடர்களே! கேளுங்கள். ஜடத்தை உண்ணுங்கள். குடியுங்கள். போகம் செய்யுங்கள். ஜடப்பிரபஞ்சத்தின் ஒரு அலையே

நீங்கள். உங்கள் இன்பத்திற்காகவே ஜடப்பிரபஞ்சம் பலகோடி முகங்களுடன் உங்கள் முன் விரிந்துள்ளது. சிருஷ்டியில் வெறும் ஒரு துளி நீங்கள். பாவ புண்ணியம் பொய். நன்மையும் தீமையும் மானுடச் சிருஷ்டிகள் மட்டுமே. மோட்சம் இல்லை மறுபிறப்பு இல்லை. மரணமே முற்றுப் புள்ளி. பிறகு ஜடம் ஜடத்துடன் கலந்துவிடும். அனுபவியுங்கள், ஆனந்தமாக இருங்கள், விட்டுக் கொடுங்கள், திருப்தியாக இருங்கள். நேசியுங்கள், வாழ்வை வெற்றி கொள்ளுங்கள். எந்த ஜடமும் எந்த ஜடத்தை விடவும் மேலானதல்ல. எந்த ஜடமும் எதற்கும் அடிமையுமல்ல. சூத்திரர்களே, மூட ஜென்மங்களே,இல்லாத மோட்சத்திற்காக இருக்கும் வாழ்வை வீணாக்காதீர்கள். வஞ்சகப் புரோகிதர்களை உதையுங்கள். அவர்களுடைய பொய்வேதங்களை எரியுங்கள். அவர்களுடைய யாக குண்டங்களை உடையுங்கள். அவர்கள் மீமாம்ச தத்துவம் மீது காறி உமிழுங்கள்...''

தாங்க முடியாத ஒரு பிராமணன் முன்னால் பிதுங்கி வந்து, மூச்சுத்திணற, கூவினான் : ''டேய் சார்வாக நாயே சதுர்வித புருஷார்த்தங்களும் பொய் என்றா சொல்கிறாய்?''

''பொய் மட்டுமல்லடா சதியும் கூட. காமம் மட்டுமே புருஷார்த்தம் டேய் பிராமணா எதற்காகடா நான்கு வேளை தின்கிறாய்? எதற்காகடா நாலு மனைவி உனக்கு? எதற்காகடா தானம் தானம் என்று பறக்கிறாய்? மோட்சத்திற்காகவா? சதுர்வித புருஷார்த்தங்கள் தஸ்யுக்களுக்கும் சூத்திரர்களுக்கும் மட்டும்தானா? உனக்கில்லையா?''


''உன் நாவில் விஷம் இருக்கிறதடா பாவி'' என்றபடி பிராமணன் பின்னகர்ந்தான்.

''விஷமல்ல மூடா. தீ. ஊழித்தீ'' சார்வாகன் உரக்கச் சிரித்தான். ''தஸ்யுக்களே சூத்திரர்களே கேளுங்கள்-காமம் ஒன்றே புருஷார்த்தம். அதை அடைய வேண்டிய வழிமுறை எதுவோ அதுவே தர்மம். அதற்குரிய உபகரணங்களே பொருள். மோட்சம் என்பது திருப்தியான மரணமேயாகும்!''

''அரசரின் மெய்காவலர்கள் வருகிறார்கள்'' என்று யாரோ கூறினார்கள். கூட்டம் முண்டியடித்தபடி கலைந்தது. சார்வாகன் மட்டுமே தெருவில் மீதியானான். நானும் அவனருகே நின்றேன்.

சார்வாகன் அமைதியும் தீவிரமும் ஒருங்கே தெரிந்த முகத்துடன் தன் யோகத்தண்டை வானோக்கி தூக்கி ஒரு முறை ஆட்டினான். பிறகு நடக்க ஆரம்பித்தான்.

''அரண்மனைக்கல்லவா போகிறான்'' ஒருவன் பீதியுடன் கேட்டான்.



''இவனை யார் நகருக்குள் அனுமதித்தது?'' ஒரு பிராமணன் கோபத்துடன் கேட்டான்.

''இன்று மகாதான விழா ஐயா : அரசர் கையிலிருந்து தானம் பெற யார் வேண்டுமானாலும் வரலாம். யாரையும் தடுக்க சாஸ்திரம் இல்லை.''

''நல்ல தருமம் போ. அந்தப் படுபாவி ஜனங்களின் ஒழுக்கத்தையே குலைத்துவிடுவான் என்றல்லவா தோன்றுகிறது. இந்த தஸ்யுக்கள் எவ்வளவு ஆவலாக கேட்கிறார்கள் பார்.'' ஒரு புரோகிதன் சலித்துக் கொண்டான்.

என் மனம் கொந்தளிப்படைந்திருந்தது. என் குரலையே வீறுடனும் தெளிவுடனும் நான் கேட்

பது போலிருந்தது சார்வாகனின் உரை. இந்திரப் பிரஸ்த மாநகரில் நான் இதுவரை சார்வாக மத குரு எவரையும் கண்டதில்லை. பூர்வ மீமாம்சை யும் உபநிஷதங்களும் வேதகோஷ விளக்கங்க ளும் சதா ஒலிக்கும் இந்திரப்பிரஸ்த நகரில் லோகாயதத்தைபெயர்குறிப்பிட்டு பேசுவது கூட குற்றம். அவநம்பிக்கை வாதியை தண்டிக்க புரோ கிதப்படை வந்து விடும் ஆயுதங்களுடன். ஆயி னும் அதை அழிக்க இயலவில்லை. நிலவறைக ளின் இருளில் முன்பின் தொடர்பற்ற சுவடிகளின் வடிவில் அது புதைந்து கிடக்கிறது. ரகசிய விவா தங்கள் வழியாக பரவுகிறது. எனக்கு அவை போதவில்லை. என் உள்ளூரக் கேள்விகள். ஒரு விரல்நுனியால் தொட்டால் அந்தப் பதுமை பத்து குளிர்ந்த விரல்நுனிகளால் என்னை தொடுகிறது. அசேதனப் பிரபஞ்சமாகிய இதில் சேதனையா கிய உயிர் எப்படி வந்தது? நான் ஜடமா, சேத னையா? முடிவற்ற சேதனை எனும் பிரம்மத்திலி ருந்து சகல அசேதனங்களும் உருவாயின என்ற உபநிஷத ஞானம் எனக்கு ஒப்ப முடிவதாக இல்லை. அதே சமயம் முடிவற்ற ஆதி அசேதனப் பிண்டத்தின் அலைகள் தான் சேதனைகள் என்ற லோகாயத ஞானமும் எனக்குத் திருப்தியாக இல்லை. ஜடவாதத்திலேயே எத்தனை பிரிவுகள். சிருஷ்டியின் ஆதிகாரணம் மூலப்பிரகிருதி என்கி றது சாங்கியம். அணுக்களின் விசேஷத்தன்மை என்கிறது வைசேஷிகம். என் மூளை மோதித் தெறிக்கிறது. என் ஞானம் நெற்றியை அறைகி றது. தலைக்குள் ஈயக்கட்டி போலத் தெறிக்கிறது.

சார்வாகன் நிமிர்ந்து நடந்து கொண்டிருந் தான். மகாதான விழாவின் போது மட்டும் வருப வன். மற்ற நாட்களில் சுடுகாட்டில், சிதைத்தீயில் வாய்க்கரிசியை சமைத்துண்டு வாழ்வான். மர ணம் சுமந்து வருபவர்களிடம் ஜடத்தின் நிலையா மையைப் பற்றியும், இனி இல்லை என்று அணை யும் முடிவைப் பற்றியும் சொல்லுவான். மறுமை யெனும் பொய்யை நம்பி இம்மையை இழக்காம லிருக்க உபதேசிப்பான். அவன் உடலே ஒரு சிதை. அதில் தகதகத்து எழுந்து கூத்தாடும் தழலே அவன். சிலசமயம் வெடித்துச் சிதறி சுழன்றாடுகி றது. சிலசமயம் தேஜஸ் மிளிரும் சிற்பம் போல உறைகிறது. சிலசமயம் திராவகம் போல உருகிச் சுழல்கிறது. விறகு சாம்பலாகும் வரை அது ஒளி சிதறியபடியேதான் இருக்கும்.

தெருக்கள் தோறும் நின்று சார்வாகன் பிரச்சா ரம் செய்தான். கிடைத்த வாய்ப்பை அவன் முற்றி லும் பயன்படுத்திக் கொண்டான். ஜனங்கள் அவ னைச் சூழ்வதை, அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அதிர்வதைக் கண்டேன். சிந்தனை தேங் கிய விழிகளைக் கண்டேன்.

சார்வாகன் அரண்மனை நோக்கி சென்று கொண்டிருந்தான். அந்த வேளையில் இந்திரப் பிரஸ்த நகரமே அரண்மனை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. அங்கம், வங்கம், கலிங்கம், காந் தாரம், வேசரம் தட்சிணம் என சகல தேசங்களில் இருந்தும் ரிஷிகளும் யோகிகளும் வந்தனர். தாந் திரிகர்களும் பைராகிகளும் வந்தனர். நாளை கிருஷ்ண துவைபாயனன் தேவர்களும், கின்னர்க ளும், வித்யாதரர்களும் வந்திருந்தார்கள் என எழுதுவான்.

கூட்டம் மெல்ல மெல்ல செறிவு பெற்றபடியே வந்தது. அரண்மனை தொலைவில் தெரிந்தது. இங்கிருந்தே நீண்ட வரிசை. எத்தனை விதமான முகங்கள். நான் வியாசனல்ல. குறைந்தபட்சம் சூதனுமல்ல. என் நிறமற்ற வார்த்தைகளை மீறி யது அந்தக் காட்சி.

முடிசூட்டிக் கொண்ட தருமன் இன்று இரவலர் களுக்கும், பிராமணர்களுக்கும், ரிஷிகளுக்கும், பண்டிதர்களுக்கும் அள்ளி வழங்குகிறான். இன்று அவன் தன் கஜானாவையே காலி செய்துவிட வேண்டும். மீண்டும் நிரப்பத்தான் சூத்திர ரத்தம் வயல்வெளிகளில் பாய்ச்சப்படுகிறதே.

சார்வாகனும் வரிசையில் இணைந்து கொண் டான். தன் மண்டையோட்டுக் கப்பரையுடன்.

''பாவி, சக்ரவர்த்தியின் தானத்தை மண்டை யோட்டிலா வாங்குவாய்?'' ஒரு பிராமணன் கொதித்தான்.

''ஏன் நீ எதையுமே மண்டையில் வாங்க மாட்டாயோ?''

சிலர் சிரித்தனர். பிராமணர்களின் முகங்கள் சிவந்தன. அவனைப் பார்ப்பதையே தவிர்த்தனர் பலர்.

''சார்வாகா, வேதம் ஓதி அளிக்கப்படும் பிட்சை மட்டும் உகக்குமோ உனக்கு?''

''மலத்தில் முக்கி அளித்தாலும் பொன் பொன் தானே மூடா?''

''கொல்லு, கொல்லு அந்தப் பாவியை'' பிராமணர்கள் வரிசை கலைந்து சார்வாகனை நோக்கிப் பாய்ந்தனர். சிலர் பிடித்துத் தடுத்தனர்.

தலைமைப் புரோகிதன் தன் கலிங்கத்துப் பட்டை சரியாக இழுத்துப் போட்டுக்·கொண்டபடி கறுவினான். ''டேய் சார்வாகா, வேதங்களைப்பற்றி ஒரு வார்த்தை பேசினாய் என்றால் உன் துஷ்ட நாக்கை இழுத்து அறுத்துவிடுவேன். ஜாக்ரதை!''

''அடியேன் உபநிஷதம் பாடலாமா'' சார்வாகன் கிண்டலாகக் கேட்டான். ''சாந்தியோக உபநிஷதம் உங்களுக்குப் பிடிக்குமல்லவா?'' சார்வாகன் உரக்கப் பாடினான். ''இதோ பிராமணர்களின் ஊர்வலம் போகிறது. ஓம் நாம் குடிப்போமாக. ஓம் நாம் தின்போமாக என்று ஊளையிட்டபடி போகும் நாய்களின் வரிசை போல ......''

''அடேய்'' என்று தலைமைப் புரோகிதன் கூவினான். கூட்டம் சார்வாகன் மீது பாய்ந்தது. ''கொல்லு அந்த நீசனை. கிழித்தெறி நாஸ்திகப் பாவியை.''

''நில்லுங்கள்'' என்று ஒரு கூரிய குரல் கேட்டது. ''நிறுத்தச் சொல்கிறேன். கிருஷ்ண துவைபாயனன், ராஜகுரு கட்டளையிடுகிறேன். நிறுத்துங்கள்...''

மரவுரியும் உடம்பெங்கும் சாம்பலும் அணிந்த, மெலிந்து உயர்ந்த, தூய வெண்ணிற தாடியும் தலைமயிரும் பறக்கும் சிவந்த நிறம் கொண்ட முதியவர் தோன்றினார். புன்னகையில் பிரகாசமான இனியமுகம். குழந்தையின் கண்கள் போல தூய்மையான கண்கள்.

''கிருஷ்ண துவைபாயனன்'' என்று குரல்கள் எழுந்தன. ''மகா வியாசன்.''

மவுனம் உருவாகியது. பிராமணர்கள் முனகியபடி முஷ்டிகளை நெரித்தபடி பின் வாங்கினர். சார்வாகன் தன் கப்பரையைத் தேடி எடுத்துக் கொண்டு எழுந்தான்.

''என்ன இது புரோகிதர்களே, அவர் கூறிய உபநிஷதப் பாடலைவிட வேடிக்கையாக அல்லவா இருக்கிறது அதை நிருபிக்க நீங்கள் துடிக்கும் துடிப்பு?''

''குருநாதரே'' என்றன மன்றாடும் குரல்கள்.

கிருஷ்ண துவைபாயனன் சிரித்தார். பிறகு, ''இதோ பாருங்கள். இன்று மகாதான விழா. ஒரு மிருகம் இன்று தானம் பெற வந்தால் கூட அவிஸேற்க வந்த தேவனுக்கு சமம் அது. மறந்துவிட்டீர்களா என்ன? அவர் சார்வாக மகரிஷி. அவருடைய கட்சியை அவர் கூறுகிறார். சார்வாகரே, நீரும் சற்று அமைதியாக இரும்.''

சார்வாகன் சிரித்தான். ''வியாசா, நீ உன் சமரச மார்க்கத்தை இன்னும் விடவில்லையா?''

சிரித்தபடி கிருஷ்ண துவைபாயனன் நடந்தார். வரிசை நகர ஆரம்பித்தது. பிராமணர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்து கறுவிக் கொண்டிருந்தனர். நான் சார்வாகனைப் பார்த்தபடியே நகர்ந்தேன்.

மண்டபப் படிகளை ஏறினோம். யக்ஞ சாலையின் உள்ளே புகை கமழ்ந்தது. வேத கோஷம் ஒலித்துக் கொண்டிருந்தது. தான மண்டபத்தில் பெரிய களஞ்சியத்தின் அருகே தம்பியர் புடை சூழ தருமன் நின்றிருந்தான். வைரங்கள் பதிக்கப்பட்ட பெரிய மணிமுடியும், செங்கதிர் வீசும் நெருப்பாரமும், கலிங்கத்துப் பட்டாடைகளும், பாண்டிநாட்டு மணிமுத்துகள் பதிக்கப்பட்ட நகை

களும் அவனை ஆரிய வர்த்தத்தின் மகா சக்ர வர்த்தி என ஒவ்வொரு அசைவிலும் ஜ்வலித்து அறிவித்துக் கொண்டிருந்தன. அவனுக்குப் பின்னால் கரிய உடலும் ஒளிவீசும் கண்களும் கொண்ட பார்த்தன். அவனருகே பீமனின் நெடிய உடல். நகுலன். சகதேவனின் பொன்னிற மேனி. யாக குண்டத்தில் நெய் எரியும் மணம் எங்கும் கமழ்கிறது. சோமபானத்தின் புளிப்புநுரை வீச்சம் அதனுடன் கலக்கிறது. அள்ளக் குறையாது கொட்டி நிரப்பப்படுகிறது பொற்குவை. நாணயங்களின் ஒலியுடன் தருமனின் கையணிகளின் ஓசை கலந்து கொண்டிருக்கிறது. அவன் முகத்தில் களைமிக்க சோர்வு படர்கிறது.

நான் சற்று பராக்கு பார்த்தபடி நின்று விட்டிருக்கவேண்டும். திடீரென்று ஒரு மவுனம் ஏற்படுவதைக் கண்டேன். சார்வாகன் தருமன் முன் நிற்பதை உடனே கவனித்தேன். உற்சாகக் குரல்களும் வாழ்த்தொலிகளும் ஆணைகளும் மெல்ல அவிந்தன. யக்ஞ மண்டப மவுனம் வெளியே கசிந்து பரவியது. காவலர் முகங்களில் ஒருவிதமான அச்சம் குடியேற ஆரம்பித்தது. தருமனின் முகத்தில் குழப்பம் கவிழ்ந்தது. அர்ச்சுனன் முகம் கல்லாக இறுகியது.

சார்வாகன் தன் மண்டையோட்டை தருமன் முன் நீட்டினான். தருமனின் முகம் சுளித்தது. அவன் கரங்கள் தடுமாறின.

தருமனின் வலப்புறம் கிருஷ்ண துவைபாயனன் தோன்றினார். ''என்ன தயக்கம் தருமா? மகரிஷிக்கு தானம் வழங்கு. எல்லையற்ற ஞானக் கடலில் ஒரு அலைதான் அவரும்.''

தருமன் செயற்கையானதோர் உல்லாசத்தை வரவழைத்துக் கொண்டான். அவன் கரம் பொற்குவையில் அமிழ்ந்தது. கைநிறைய நாணயங்களை அள்ளி சார்வாகனின் கப்பரையில் போட்டான்.

சார்வாகன் தன் கப்பரையை நாசியருகே தூக்கி முகர்ந்தான். முகம் சுளித்தபடி நாணயங்களை கீழே கொட்டினான். பளிங்குத் தரை மீது அவை கலகலத்தன. பிறகு மீண்டும் தன் கப்பரையை நீட்டினான்.

தருமன் தயங்கினான். கிருஷ்ணதுவைபாயனனை ஓரக்கண்ணால் பார்த்தான். அவருடைய வெண்தாடிப் புதருக்குள் கண்கள் சிரித்தன. அவர் தன் கையை அசைத்தார். தருமன் மீண்டும் நாணயங்களை அள்ளி சார்வாகனின் கப்பரையில் போட்டான். இம்முறையும் அதை முகர்ந்துவிட்டு அவன் தரையில் கொட்டினான்.

மீண்டும் அவன் தன் கப்பரையை நீட்டிய போது அர்ச்சுனன் கோபத்துடன் ஓரடி முன்னால் வந்து, ''என்ன வேண்டும் உமக்கு?'' என்றான்.

''பிட்சை''

''கொடுத்த நாணயங்களை ஏன் கொட்டினாய்?''

''அவற்றில் உதிர வாடை வீசுகிறதே!''

அர்ச்சுனன் முகம் விகாரமடைந்தது. தருமன் வெளிறிவிட்டான். அவன் முகம் கோணி அசிங்கமாக மாறி விட்டது.

கிருஷ்ண துவைபாயனன் சமாதானக்குரலில் ''சார்வாகரே, வேறு நாணயங்களை வாங்கிக் கொள்ளும்'' என்றார். பின் தருமனுக்கு சைகை காட்டினார்.

தருமன் மீண்டும் அள்ளினான். சார்வாகனின் கண்களைத் தவிர்த்தவனாக அதை அந்த திருவோட்டில் போட்டான். சார்வாகன் அவற்றையும் முகர்ந்து விட்டு தரையில் கொட்டினான். தருமனைப் பார்த்து கலகலவென்று சிரித்தான். ''தருமா, உதிரம் மணக்காத நாணயம் உன் களஞ்சியத்தில் உண்டா என்ன?''

அர்ச்சுனன் கரம் சரேலென்று அம்புறாத் தூணியை நாடியது. கிருஷ்ண துவைபாயனன் முன்னால் பாய்ந்து அவனைப் பிடித்தார் ''விஜயா நில். அவர் மகரிஷி'' என்று கூவினார்.

''யார் இந்தப் பாவியை உள்ளே விட்டது? ஆரிய வர்த்தத்தின் மகாசக்ரவர்த்தியை அவமானப்படுத்த இவனை யார் அனுமதித்தது?'' அர்ச்சு

னன் கூவினான். ''பிராமணர்களே... புரோகிதர்களே... யாருமில்லையா இங்கு? இந்தப் பாவிக்கு பாடம் புகட்ட ஆளில்லையா?''

மறுகணம் புரோகித வரிசை கலைந்தது. ''கொல்லுங்கள் கொல்லுங்கள் அந்த நீசனை'' என்ற கூக்குரல் நாலாதிசையிலிருந்தும் பீரிட்டது. பெரும் கூட்டமே சார்வாகன் மீது பாய்ந்தது. கிருஷ்ண துவைபாயனன் ''வேண்டாம் வேண்டாம்'' என்று அலறியதை யாரும் பொருட்படுத்தவில்லை. சார்வாகனை அவர்கள் தரதரவென்று இழுத்து முற்றத்திற்குக் கொண்டு சென்றனர். அதற்குள் அங்குள்ள பிராமணர்களுக்கும் செய்தி பரவி பெரும்படையே அந்த உடல் மீது விழுந்தது. எங்கும் தலைகள். நெரிபட்ட முட்டிமோதும் உடல்கள். கால்களின் புதர்கள். காற்றில் அலையடிக்கும் கரங்கள். அலையோசைபோல வெறிக் குரல்கள்.

நான் சார்வாகனை நோக்கிப் பாய முயன்றேன். உடல்களினால் முட்டி மோதி தள்ளப்பட்டேன். மாமிச அலையின் கொந்தளிப்பில் சுழட்டப் பட்டேன். அமிழ்ந்தேன். உந்தி மேலெழுந்தேன். விசிறப்பட்டேன். என் கண்முன் முகங்களைக் கண்டேன். எல்லா முகங்களும் ஒன்று போலிருந்தன. வெறியில் வாய் பிளந்தவை. சிவந்த கண்கள் புடைத்தவை. நெரிபவை. அடித்தொண்டையின் ஊளைகள்.

திடீரென்று பச்சைரத்த மணம் எழுந்தது. என் உடம்பு அப்படியே குளிர்ந்து விட்டது. நரம்புகள் இழுபட்டு உறுப்புகள் தாறுமாறாக் துடிக்க ஆரம்பித்தன. நானும் உரத்த குரலில் ஏதோ கூவியபடி இருப்பதை திடீரென்று உணர்ந்தேன். என் தொண்டை உடனே அடைத்துக் கொண்டது.

''நெய்! நெய் குண்டா!'' என்று ஒரு குரல் கூவியது. உடனே பல குரல்கள் ''நெய்'' ''நெய்'' என்று கூவின. பலபேர் யக்ஞசாலையின் நெய் குண்டாவை நோக்கிப் பாய்ந்தனர். கரங்களின் அலையடிப்புக்கு மேலே அது மிதந்து செல்வதை கண்டேன். பிறகு கும்பல் சிதறி ஓடுவதைக் கண்டேன். முதலில் நெய் எரியும் வாடை எழுந்தது. பிறகு கூரியதோர் துர்நாற்றம் என்னைத் தாக்கியது.

அதிர்ச்சியிலும் பயத்திலும் விதிர்த்துப் போய் நான் அப்படியே நின்றேன். உடல்களின் இடைவெளிகள் வழியாக ஜ்வாலை தெரிந்தது. புகை குமுறுவது தெரிந்தது. என் வயிற்றுச் சதைகள் இழுத்துக் கொண்டன. என் கால்கள் தளர்ந்து மடங்கின. மெல்லப் பிரக்ஞையை இழக்க ஆரம்பித்தேன். மண்டபத் தூணில் சாய்ந்தேன். பளிங்கின் குளுமையை என் முதுகு உணர்ந்தது. வழுக்கியபடி சரிந்தேன். பூமி மாபெரும் வலிமையுடன் என்னை இழுத்தது. உடம்பு பொதிபோல தரை மீது மோதியது. அடுத்தக் கணம் என் சகல நரம்புகளும் பட்பட் என்று முறுக்கமிழந்தன. கரங்கள் துவண்டு விழுந்தன. என் மனம் கரைய ஆரம்பித்தது.மெல்ல இல்லாமல் ஆயிற்று.

என் பிரக்ஞை மீண்டபோது இரவு அமைதியாக இருந்தது. யக்ஞமுற்றம் மண்டபப் பளிங்கையும் முற்றத்தின் கல்பதியபட்ட விரிவையும் தூரத்துக் கோட்டைச் சுவர்களையும் அரண்மனை முகடுகளையும் தழுவியபடி வழிந்தது நிலவு. காவலர்களின் பாதக் குறடுகள் தூரத்தில் ஒலித்தன. வேறு ஒலியே இல்லை. போர் முடிந்த களம் போலிருந்தது அப்பகுதி. ஏதேதோ பொருட்கள் சிதறிக் கிடந்தன. பீதியூட்டும் வெறுமை எங்கும். மானுடச் சலனமே தெரியவில்லை.

மெதுவாக எழுந்தேன். சாய்ந்து அமர்ந்தேன். கண்களை நிறைத்தபடி விரிந்தது வானம். மேகங்கள் தேஜஸ் பெற்று தியானத்திலாழ்ந்திருந்தன. என் மனம் பொங்கி விரிந்தது. என் புலன்களை வானம் இழுத்துக் கொண்டது. உடம்பு பாரமாக ஆகும் அந்த மகத்தான தவிப்பு என்னுள் பரவியது. ஏக்கம் நிறைந்து என் மனம் புடைத்து விம்மியது. மறுகணம் தீப்பட்டது போல சுரீலென்று சுருண்டுகொண்டது என் பிரக்ஞை. எல்லா சரடுகளும் அறுந்து சுருண்டு துடிதுடித்தன. விதிர்த்துப் போய் எழுந்தேன். எங்கிருக்கிறேன். அய்யோ இந்த இடமா! பரபரவென்று காட்சிகள் மின்னித் தெரிந்து மறைந்தன. தூரத்தில் அந்த கருங்கல் தடத்தைக் கண்டேன். மூச்சு உள்ளேயே சிக்கிக்

கொண்டது. அப்படியே ஸ்தம்பித்து நின்றேன்.

ஜோதிவடிவாக சுழன்று சுழன்று எரிந்த சார்வாகன். அவனை எரித்தது நெய்யல்ல, அவனுள் சுடர்ந்த ஞானம் தான். அவன் கண்கள் நினைவுக்கு வந்தன. அவன் குரல் காதில் ஒலித்தது. ஒரு கணம் உடல் புல்லரித்தது. கண்கள் நனையுமளவு சிலிர்ப்பு என் மீது பரவியது. மறுகணம் கிரீச்சிட்டு ஒரு திசைநோக்கி வீசியெழுந்தது என் ஊஞ்சல்.

காமமே புருஷார்த்தம் என்றவன் எந்தப் புருஷார்த்தத்திற்காக சிதைகள் நடுவே தன்னை விறகாக்கிச் சுடர்ந்தான்? எதற்காக அதிகாரத்தின் பளிங்கு மண்டப முற்றத்தில் ஆகுதியானான்?

ஊஞ்சல் சுழன்று என் மண்டைச் சுவரில் மோதுகிறது. கடையாணியின் ஓலம். கிரீச் கிரீச்... அய்யோ கைகளால் தலையைப் பிடித்துக் கொண்டேன். கண்களை மூடிக் கொண்டேன். பம்பரம் போல நான் சுழல்வதாகப் பட்டது. சுற்றி சகலமும் சுழல்கின்றன. பிரபஞ்சமே சுழன்று சுழன்று வேகம் பிடிக்கிறது. சுழல் வேகத்தில் ஒரு கணத்தில் எல்லாமே மறைந்து விட்டன. சுழல்மையமாக நான். ஒரு புள்ளியாக நான். சகல பிரபஞ்சத்தையும் தூக்கிச் சுழட்டும் சக்தியின் மைய புள்ளி அழுத்தத்தின் அதிஉச்சம். என் நெற்றிப் பொட்டை மையம் கொண்டிருக்கிறது அது. வெடித்து விடும் இதோ இக்கணம். இதோ இதோ... சட்டென்று சகலமும் நின்று விட்டது. அழுத்தமில்லை. எதுவுமே இல்லை. திசைகளற்ற மேல்கீழற்றப் பெருவெளி. ஒரு கணம் தான். மறுகணம் பிரக்ஞை பீரிட்டெழுந்தது. உதறினேன்.மவுனமானதோர் ஓலத்துடன் கண்விழித்தேன். என் சித்தம் கழண்டு தெறிக்கப் போகிறது. நான் பைத்தியமாகப் போகிறேன். அய்யோ.. இல்லை.. மீண்டு விட்டேன். ஒரு கணநேர உதறலில் மீண்டு விட்டேன். போதும். இதோ கிளம்புகிறேன். நள்ளிரவில் என் மரவீட்டுக் கதவை தட்டுவேன். குளிர்காற்று போல அம்மா வருவாள். ''அம்மா வந்து விட்டேன். மீண்டு வந்து விட்டேன். என்னை உன் வீட்டின் கரிய வெதுவெதுப்பான மர அறைகளுக்குள் அடக்கி வை. எனக்கு வானத்தை காட்டாதே. உன் கை உணவை உண்டு உன் மகனாக உன்னருகே இருக்கிறேன். அய்யோ அங்குச் சுவர்களில் ரிஷிமுகங்கள் இருக்குமே. சிரிப்பவை. நகையாடுபவை. அம்மா, என்னை உண்டு விடு. உன் உதரத்தில் அடக்கிவிடு. உன் கருப்பையின் மவுனத்தையும் வெப்பத்தையும் கொடு. உன் உதிரத்தையும் நினைவுகளையும் உண்டு அங்கு ஒடுங்கிக்கொள்கிறேன். அங்கும் வருமே. அய்யோ என் தந்தையின் பீஜம் ஓடும் உன் உதிரக்குழல்கள். அங்கும் வருமே. அவருடைய கண்களுள் தவித்தலையும் ஒளி அந்த இருட்டுக்குள் ஒரு மின்மினி போல் என்னை நோக்கி பறந்து வருமா? அம்மா. அங்கும் கையுதைத்து காலுதைத்து வெளி வெளி என்று தவிப்பேனா? அம்மா... அம்மா...

எழுந்தேன். தள்ளாடி நடந்தேன். என் மனம் மன்றாடியது. ஓய்வு. என் உடல் கெஞ்சியது. ஓய்வு. என் புலன்கள் அனைத்தும் மெல்ல அவிந்து கொண்டிருந்தன. இனி முடியாது என்று தோன்றியது. ஆனால் உள்ளிருந்து ஏதோ உத்வேகம் அப்போதும் கசிந்து கொண்டிருந்து. யுகங்களுக்கு முன் அந்த ரிக்வேதக் கவிஞன் மனமொடிந்து கூவியகுரல் எனக்குக் கேட்டது. ''நான் யார்? எனக்குத் தெரியவில்லை. மனசின் அறிய முடியாத சக்திகளினால் நான் அலைந்து திரியும்படி ஆக்கப்பட்டேன்.''

என் காலில் எதுவோ மிதிபட்டது. பாம்பு என்று உள் மனம், சொல்ல உடம்பு எகிறியது. மெல்ல ஓய்ந்தபிறகு உற்று கவனித்தேன். அரையிருளில் நீளமாக வழவழப்பாக எதுவோ கிடந்தது. சிறிது நேரத்தில் என் கண்கள் பழகி நான் அதை அறிந்தேன். சார்வாகனின் யோக தண்டு.

●